BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# பழங்குடியின மக்களின் பண்பாட்டுக் கூறுகள்

முனைவர் ஜெ.சா. ஜிஜி கிறிஸ்டோபெல்
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், அமெரிக்கன் கல்லூரி, மதுரை- 625002
மின்னஞ்சல் : gigichristobel@americancollege.edu.in

**ஆய்வுச் சுருக்கம்**

மனித சமூகம் என்பது தொன்மையான பழங்குடி அமைப்பிலிருந்து உருவானதுதான். நிலவியல் மற்றும் வாழ்விடச் சூழல் காரணமாக வெளியுலகத்திற்குத் தெரியாமலேயே ஓர் இனம் வாழ்ந்து வருவதையும் அவர்களுக்கென்று தனித்த பண்பாட்டு அடையாளங்கள் இருப்பதையும் பன்னெடுங் காலமாக அறிய முடிகின்றது. ஆதி மனிதன் நாகரிக வளர்ச்சியற்ற காட்டு வாழ்விலிருந்து மீட்சியடைந்து, ஒரு குழுவாக வாழ்வியல் அனுபவம் பெற்று பண்பாட்டு அம்சங்களுடன் மரபு வழியில் தலைமுறை தலைமுறையாக தங்களுக்கென்ற பழக்கவழக்கங்கள், நெறிமுறைகள், வாழ்க்கை வட்டச் சடங்குகளுடன் இயற்கைச் சூழலுக்கேற்ப தங்களைத் தகவமைத்துக் கொண்டான். குறிப்பாக, பழங்குடிகள் தங்களின் பூர்வகுடித் தொல் வடிவத்திலிருந்து வளர்ந்து பல்வேறு மாற்றங்கள் கண்டு வாழ்வை நெறிப்படுத்திக் கொண்டதுடன் தங்களின் வாழ்விடங்களை மையப்படுத்திச் சூழ்நிலைக்குத் தக்கவாறே வாழும் முறைமையை இவர்களுடைய பண்பாட்டுக் கூறுகளின் வழியாக அறிந்து கொள்ளலாம். அதே சமயம், பழங்குடியினர் பண்பாட்டுக் கூறுகள் பிற மனித சமூகங்களின் தலையீட்டாலும், புதிய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியாலும், வனம் அழிப்பு போன்ற பல்வேறு சூழ்நிலைகளாலும் பாதிப்பிற்குள்ளாகி வருகிறது. என்றாலும், பழங்குடி மக்களின் பாரம்பரிய அனுபவ அறிவு, மருத்துவம், தொழில் முறைகள், உணவு முறைகள், இசை, கலைகள் மற்றும் வாழ்வியல் சடங்குகள் முதலானவற்றை பதிவு செய்வதும், இம்மக்களை அழியவிடாமல் பாதுகாப்பதும் இன்றைய சூழலில் மிக அவசியமான ஒன்றாகும். அந்த வகையில் தமிழிலக்கியங்களில் காணலாகும் பழங்குடியினரின் பண்பாட்டுக் கூறுகளை ஆய்ந்து எடுப்பரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள் (Keywords):** பண்பாடு, பழங்குடிகள், தலைமுறை, சடங்குகள், வனம், அனுபவ அறிவு, தொழில்நுட்பம்.

## முன்னுரை

பழங்குடியின மக்கள் பூமியில் மனித இனம் தோன்றிய காலந்தொட்டு சிறு சிறு பிரிவுகளாகப் பிரிந்து வாழ்ந்து வரும் ஓர் இனம் ஆகும். இவர்கள் தங்களுடைய வாழ்க்கை முறையினைத் தங்களைச் சுற்றியுள்ள வாழ்விடத்திற்கேற்ப அமைத்துக் கொள்வதுடன், தங்களுக்கென்ற தனித்த பண்பாட்டுக் கூறுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். தமிழகத்தில் பழங்குடியின மக்கள் குறிஞ்சி, முல்லை நிலங்களில் வாழ்ந்ததாக இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. பாலை நிலம் இல்லையாயினும் முல்லையும், குறிஞ்சியும் மழையின்றி கடும் பாதிப்பிற்குள்ளாகி, தமக்குள் இயல்பு நிலை திரிந்து உருவான பாலை நிலைத்திலும் பழங்குடி மக்கள் வாழ்ந்துள்ளனர் என இலக்கியங்கள் பகர்கின்றன. குறிப்பாக, அவர்தம் வாழ்க்கை நிலை, பண்பாடு குறித்து, பல இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

சங்க இலக்கியங்களில் குறிஞ்சி நிலக்கிழவன், முல்லை நிலக் கோவலர், கானக்குறவர், எயினர், எயினி, எயிற்றியர், கோவினத்து ஆயர், புல்லினத்து ஆயர், ஆயர், ஆவியர், ஆய்மகன், ஆய்மகள், புலையர், இடையர், இடைமகன், இடைமகள், கானக்குறவர், சிறுகுடிகுறவன், கோவலர், கோவலர்குடி, கோசர், கோயன், கோயமான், வேட்டுவர், வேடர், காணிக்காரர், மழவர் என பல்வேறு பெயர்களில்

பழங்குடியின மக்கள் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன.

காடும் மலையும், மலைச்சாரல் அருவியும், இயற்கை எழில் கொஞ்சும், சூழலிலும் பழங்குடியின மக்கள் ஒன்றி வாழும் வாழ்வு உன்னதமானது. இவர்களின் அமைதியான வாழ்க்கை, சமூக ஒருங்கிணைப்பு, பண்பட்ட நெறி, வேறுபாடில்லாத் தன்மை கொண்ட பண்பட்ட வாழ்க்கை முறையினைப் பழங்குடியின மக்களிடம் காணமுடிகிறது.

**பண்பாட்டுக் கூறுகள்**

பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள் முதலானவைகளும், மனித சமூகத்தின் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் திறமைகளும் பழக்கவழக்கங்களும் கொண்ட ஒரு முழுமையான தொகுதிகளாகும் என்று மானிடவியல் அறிஞர் எட்வர்ட் பண்ட் டைலர் வரையறுப்பதை ம. இராஜேந்திரன் தமது நூலில் சுட்டிக் காட்டுகிறார்(2014: 67). இந்த வரையறையை அடிப்படையாகக் கொண்டு பழங்குடியின மக்களின் வாழ்க்கை முறையினையும், அவர்களுடைய பண்பாட்டுக் கூறுகளையும் ஆதி மனிதனின் பண்பாட்டுக் கூறுகளுடன் பெரும்பாலும் ஒத்துப் போகக் கூடியதாக உள்ளதை அறிய முடிகின்றது. அதே போன்று இயற்கையை உயிர்சக்தியாகப் பாவித்து வழிபடுவதும், மூதாதையரை வழிபாடு செய்வதும், பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறுச் சடங்குகளை நிகழ்த்துவதும், தங்களுக்கான வாழ்வாதாராங்களை விளைவித்து தரும் பூமியாக காடு, மலைப் பகுதிகளை வழிபடுவதும் பழங்குடியின மக்களின் இயல்பான ஒன்றாகும்.

காடுகளிலும் மலைகளிலும் விளைந்திருக்கும் தாவரங்களின் மருத்துவக் குணங்களை அறிவதும், காட்டு மூங்கில்களைக் கொண்டு பல்வேறு கைவினைப் பொருட்களை உருவாக்குவதும், விலங்குகளின் காலடித் தடங்களைக் கொண்டு அவற்றின் மறைவிடங்களைக் கண்டறிவதும், உயர் மலைகளிலும், மரங்களிலும் ஏறி தேனெடுப்பதும், மீன் பிடிப்பதிலும், பயிர்களை உழவிடுவதிலும் வல்லமை கொண்டவர்களாகத் திகழ்பவர்கள் பழங்குடியின மக்கள். உலகம் மற்றும் உயிர்கள் பற்றி உருவான அற்புதமான கதைகள் மூலம் பழங்குடியின மக்கள் கதை சொல்லியாகவும் இருப்பதை வெரியர் எல்வின் தமது குறிப்புரைகளில் பதிவு செய்திருக்கிறார்.

**இருப்பிடச் சூழல்**

சங்க இலக்கியத்தில் 'ஊர்' என்ற சொல்லாட்சி உண்டு. மக்கள் சேர்ந்து வாழும் பகுதியை இது குறிக்கிறது.

*"குன்றுபின் ஒழியப் போகி, உரந்துரந்து,*
*ஞாயிறு படினும், ஊர் சேய்த்து எனாது"*

*(அகநானூறு, 9: 14 -15)*

*"வான் உட்கும் வடிநீண் மதில்|*
*மல்லல் மூதூர் வய வேந்தே!"*

*(புறநானூறு, 18: 10-11)*

என்ற தொடர்களில் 'ஊர்' என்ற சொல் இடம் பெறுகின்றன. ஆனால், பழங்குடியின மக்கள் காடுகளிலும், மலைக்குகைகளிலும் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக, காடுகளில் உள்ள குடிசைகள் பெரும்பாலும் மூங்கில்களாலும் புல்லாலும் வேயப்பட்டு காணப்படுகின்றன. கூரை வேய்வதற்குப் புற்களைப் பயன்படுத்தும் தன்மையைச் சங்க கால குறிஞ்சி மக்களிடம் காணலாம்.

*"அகலுள் ஆங்கண் கழி முடைந்து இயற்றிய*
*புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்"*

*(மலைபடுகடாம், 439)*

என்ற அடிகளுக்கு 'அகன்ற ஊரிடத்துக் கழிவுகளால் நெறி பண்ணிய புல்லால் வேய்ந்த குடிகளில் இருக்கும் குடிகளிடந் தோறும் பெறுகுவீர்' என்ற விளக்கம் பெறப்படுகிறது.

**சங்க இலக்கியத்தில் தொல் குடிகள்**

புறநானூற்றில் மலைநாட்டுத் தலைவன் ஒருவனின் சிறப்பினைப் பாடும் புலவர் மாங்குடி கிழார் துடியன், பாணன், பறையன், கடம்பன் ஆகிய இந்த நான்கு குடிகளைத் தவிர வேறு குடிகள் இல்லை என்று பாடுகிறார். அந்த வகையில் அந்நான்கு குடிகளையும் தொல் குடிகளாக – பழங்குடிகளாகக் கருத இடனிருக்கிறது. தவிர குறவர் பற்றிய குறிப்புகளும் சங்கப் பாடல்களில் இடம் பெற்றிருக்கின்றன. அதே போன்று குறும்பர் எனப்படுவோர் காடு சார்ந்த முல்லை நிலப் பகுதிகளையும், சிறிய அரண்களையும் பாதுகாக்கும் தொல்குடிகளாக அறியப்படுவர். குறும்பு என்பதற்கு 'காடு' என்ற பொருளுமுண்டு. மேலும், பாணர் சமூகத்தில்

துடியர், கோடியர், வயிரியர், கண்ணுளர் போன்ற பதினேழு வகைக் குடிகள் இருந்ததாக பாணர் வரைவியல் நூலில் பக்தவத்சல பாரதி குறிப்பிடுகிறார். இவர்களைப் பழங்குடிகளாக வரையறுப்பதற்கான முயற்சிகள் இல்லை என்றாலும், அலைகுடிகளாக இனங் காட்டப்படுகிறார்கள். வேட்டுவர்கள் குறிஞ்சி நிலத்தின் முதன்மைத் தொல்குடிகளாக அறியப்பட்டனர்.

*"புலியொடு பொருத புண் கூர் யானை*

*நற்கோடு நயந்த அன்புஇல் கானவர்" (நற்.65:5-6)*

என்ற நற்றிணைப் பாடல் மூலம் யானையின் தந்தத்தை எடுக்கக் கருதிய வேடர்கள் அதன்மீது மீண்டும் மீண்டும் அம்பெய்து துன்பப்படுத்தினர் என்பதை அறிய முடிகின்றது. வேட்டுவச் சிறுவர்கள் நெய்தல் நிலத்தில் உள்ள மரங்களின் மேலேறி நின்று மான் வேட்டையாடியதை வேடிக்கை பார்க்கும் காட்சியினை,

*"மரன்மேற் கொண்டு மான்கணந் தகைமார்*

*வெந்திறல் இளையவர் வேட்டெழுந் தாங்கு"*

*(நற்.111:4-5)*

என்னும் நற்றிணை அடிகள் புலப்படுத்துகின்றன.

குறவர் பற்றிய குறிப்புகள் சங்கப் பாடல்களில் அதிகளவில் இடம் பெற்றிருக்கின்றன. குறவன் என்பது குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்களுக்குரிய பொதுப் பெயராகும். புறநானூற்றில் குறமகள் இளவெயினி என்ற பெண்பாற் புலவர் பாடிய பாடல் உண்டு. இவர் குறவர் குலத்தினர் ஆவார். தவிர, சங்க இலக்கியத்துள் ஒன்றான ஐங்குறுநூற்றில் 'குன்றக் குறவன் பத்து' எனும் தலைப்பில் பாடல்கள் அமைந்திருப்பது கவனம் பெறத்தக்கது.

**வேட்டையாடுதலும் கிழங்கு எடுத்தலும்**

உணவுக்காக வேட்டையாடுதல் பழங்குடியின மக்களின் அன்றாடப் பழக்கமாக இருந்தது. வேட்டையில் ஒரு விலங்கு கிடைத்து விட்டால் அது அம்மக்கள் அனைவருக்குமே பொதுவாக அமையும். அது பழங்குடியின மக்கள் கடைபிடித்து வரும் ஒரு வாழ்க்கை முறை. யாருக்கு வேட்டை கிடைப்பினும் அங்கு வாழும் பழங்குடியின மக்கள் அனைவருமே பகிர்ந்துண்ணும் பண்பு கொண்டவர்கள். இதனை,

*"............................... பகல் நாள்*

*பகுவாய் ஞமலியொடு பைம் புதல் எருக்கி*

*தொகுவாய் வேலி தொடர்வலை மாட்டி*

*முள்அரை தாமரை புல்இதழ் புரையும்*

*நெடுஞ்செவி குறுமுயல் போக்கு அற வளைஇ*

*கடுங்கண் கானவர் கடறு கூட்டுண்ணும்..."*

*(பெரும்பா. 111 -116)*

என்று பெரும்பாணாற்றுப் படை விவரிக்கிறது. அதாவது, கானவர் மதியப் பொழுதில் பிளந்த வாயுடைய நாய்களுடன் சென்று குறு முயல்கள் தப்பி விடாதவாறு நாற்புறமும் வேலிகளால் சூழப்பெற்று, வேறு வழியின்றி வெளியே வரும் முயல்களை வலையுள் வீழுமாறு அகப்படுத்திக் கொள்வர். பிடிபட்ட முயல்களைக் கொன்று தான் மட்டும் தனியே உண்ணாது, கானவர் அனைவரையும் அழைத்து பகிர்ந்து உண்பர் என்கிறது பெரும்பாணாற்றுப் படை. வேட்டையாடிக் கொண்டு வந்த காட்டுப் பன்றிகளைக் குறப்பெண் அறுத்து குறவக் குடிகளுக்குப் பங்கிட்டு அளிப்பதை நற்றிணைப் பாடல் பின்வருமாறு பதிவு செய்கிறது.

*"பிணர்ச் சுவற் பன்றி தோல்முலைப் பிணவொடு*

*கணைக் கால் ஏனல் கைம்மிகக் கவர்தலின்,*

*கல் அதர் அரும் புழை அல்கி, கானவன்,*

*வில்லின் தந்த வெண் கோட்டு ஏற்றை,*

*புனை இருங் கதுப்பின் மனையோள் கெண்டி,*

*குடி முறை பகுக்கும் நெடு மலை நாட!"*

*(நற். 336: 1 -6)*

ஒருவர் பட்டினி கிடக்க மற்றொருவர் வயிறு நிரப்பி மகிழும் சிறுமைக் குணம் பழங்குடியின மக்களிடம் காண முடியாது. மானோ, பன்றியோ மற்ற விலங்குகளோ வந்து, வேட்டையில் கிடைத்துவிட்டால் வேட்டையாடியவரே எடுத்துக் கொள்ளும் பழக்கமில்லை.

வேட்டைத் தொழில் மட்டுமின்றி கிழங்கு சேகரிக்கும் தொழில் செய்பவர்களாகவும் கானவர் (குறவர்) இருந்துள்ளனர். இதனை,

*"அன்னாய் வாழிவேண்டு அன்னை கானவர்*

*கிழங்கு அகல் நெடும்குழி மல்க வேங்கை"*

*(ஐங்.208: 1-2)*

என்று ஐங்குறுநூறும்,

*"இன்று யாண்டையனோ தோழி! குன்றத்துப்*

*பழங்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினொடு"*

*(குறுந்.379:1-2)*

என்று குறுந்தொகையும் உணர்த்துகின்றன.

**தேனெடுத்தல்**

தேனெடுத்தல் பழங்குடியின மக்களின் முக்கியத் தொழிலாக இருக்கிறது. தேனெடுப்பதை 'தேனழித்தல்' என்று கூறுகிறார்கள். மரப்பொந்துகள், மரக்கிளைகள், செடிகள், கொடிகள், சாதாரண பாறை இடுக்குகளில் உள்ள தேனை பகல் பொழுதில் அறுத்தெடுக்கின்றார்கள். ஆனால் பெரும் மலைத்தேனை இரவு நேரங்களிலேயே எடுக்கின்றனர். தேன் எடுக்கச் செல்லும் போது ஆண்களும், பெண்களும் சேர்ந்தே செல்கின்றனர். தேன் எடுக்கத் தொடங்கும் முன் கடவுளை வழிபடுவார்கள். நல்ல சகுனம் கிடைத்தால் மட்டுமே தேனெடுப்பர். கெட்ட அறிகுறி தெரிந்தால் தேனெடுப்பதைத் தவிர்த்து விடுவார்கள்.

தேன் என்பது மலையின் வளத்தினைக் குறிக்கும் ஒரு பொருளாக திகழ்ந்திருக்கின்றது. தேன் சிறந்த உணவுப் பொருள் என்பதனை நற்றிணைப் பாடலானது, வண்டுகள் உண்ணுமாறு மலர்ந்த கரிய அடிப்பகுதியைக் கொண்ட வேங்கை மரத்தின் பெரிய கிளையிலே தொடுத்த கொழுவிய கண்களையுடைய தேனடையில் தேனீக்கள் மொய்த்தலால் தேன் கசிந்து கல்லின் குழிகளிலே வடியும். குறவர்களின் இளமகார் அதனை வழித்து உண்பர். அவர் உண்டது போக எஞ்சியதை மெல்லிய தலையுடைய மந்தியின் வலிய குட்டிகள் சென்று உண்ணும் என்பதனை (நற். 168: 1-5) என்ற பாடல் வரிகள் விளக்குகின்றது. மேலும், தேனை எடுப்பதற்குக் கருவிகளை பயன்படுத்தியுள்ளனர் என்பதனை மலைபடுகடாம் பாடலானது (மலைபடுகடாம், 315-317), முசுக்கலை தன்னால் ஏறமுடியாது என்று செயலற்றுப் போகக் காட்சிக்கு இனிய உயர்ந்த மலையில் நிலைபேறுண்டாகக் கூட்டி நட்ட கண் ஏணி வழியாகச் சென்று, பெரிய பயன் உண்டாகுமாறு, தேனீக்கள் திரட்டிவைத்த தேனை அழித்துக் கொண்டு வந்ததனைக் குறிப்பிடுகின்றது. இதனைப் போன்றே, மலையின் பக்கத்தில் உயர்ந்த மரங்களிலும், பாறைகளிலும் உள்ள தேனடைகளை எடுப்பதற்கு கண்ணேணி மற்றும் தமாலம் என்னும் கொடியினைப் பயன்படுத்தி ஏறியுள்ளனர் என்பதனை (நற். 292 : 1-3), (கலி. 39: 9) என்ற இருபாடல்களின் மூலம் அறியலாம்.

**வழிபாடும் நம்பிக்கையும்**

பழங்குடியின மக்கள் இயற்கையை வழிபடும் பழக்கமுள்ளவர்கள். தங்களை வாழவைக்கும் மலையையும், வனத்தையும் தெய்வங்களாகப் போற்றுகின்ற பண்பாடு இவர்களிடம் காணப்படுகிறது. காற்றையும், மழையையும், இடியையும் இவர்கள் வழிபடுகின்றனர். அச்சமும், அறியாமையும் பழமை நிறைந்த நம்பிக்கையும் இவர்களிடம் காணப்படுகின்றன. பலம் பொருந்திய சக்திவாய்ந்த யானை மற்றும் விலங்குகள் வந்தால் அச்சத்தினால் வழிபட்டுப் பழகிப்போன பழங்குடியின மக்களுக்கு இந்த விலங்குகளும் ஒரு வகையில் தெய்வங்களாக அமைந்திருந்தன.

*"ஒன்னாத் தெவ்வர் முன் நின்று விலங்கி*
*ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்தென*
*கல்லே பரவின் அல்லது*
*நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே"*

*(புறம். 335: 9 -12)*

என்ற பாடல் குடிகளைக் காப்பதற்காக தன்னுடைய உயிரினை இழந்த தலைவனை நடுகல்லாக வைத்து வழிபாடு செய்யும் வழக்கம் உள்ளதே தவிர, நெல்மணிகளைத் தூவி வழிபடும் வேறு கடவுளர்கள் எங்களுக்கு இல்லை என்ற கருத்தைப் புலப்படுத்துகிறது.

**முடிவுரை**

பழங்குடியின மக்களின் திருமண முறை, பூப்பெய்துதல், குழந்தைப்பேறு மற்றும் இறப்புச் சடங்குகள் பற்றிய பதிவுகள் சங்கப் பாடல்களில் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம். குறிப்பாக, வேடுவர்கள், குறவர்கள், கானவர்கள், எயினர்கள் போன்றோரின் குறிப்பிட்ட வாழ்வியல் பதிவுகள் மட்டுமே சங்க இலக்கியத்தில் காணக் கிடைக்கின்றன. அவற்றைப் பழங்குடியின மக்களின் பதிவுகளாகக் கொள்ளத்தகுமா? என்ற வினாவும் இவ்வாய்வு முறையில் எழுகின்றது. என்றாலும், தமிழ்ச் சமூகத்தின் தொல்குடிகளாக அவர்களைக் கண்டறிய வேண்டியிருக்கிறது. இயற்கையையும், இயற்கையின் வெளிப்பாடாக அமையும் அனைத்துக் கூறுகளையும் விழுமியங்களையும், மூதாதையரின் சிந்தனை மரபுடன் தங்களுக்கென்று தனித்துவமான பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கிய அவர்களுடைய வாழ்வியல் முறைகள் குலக் குறியீடாக அமைந்திருக்கின்றன.

**துணைநூற் பட்டியல்**


1. இராசேந்திரன், ம., மெக்கன்சி சுவடிகளில் தமிழகப் பழங்குடிகள், அடையாளம் பதிப்பகம், புத்தா நத்தம், திருச்சி, 2014.
2. சுப்பிரமணியன், ச. வே., சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010.
3. பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், அடையாளம் பதிப்பகம், புத்தா நத்தம், திருச்சி, 2017.
4. பன்னீர் செல்வம், மணி கோ., தொன்முதுகுறவர் அலைவுறும் வாழ்வு, தடாகம் பதிப்பகம், சென்னை, 2019.
5. பாலசுப்பிரமணியன், கு.வெ., சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1994.


*****